பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர் 19 புரட்டாசி 8 ஷவ்வா 10 இதழ் 224

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-9-77

# 1000 அகதிகளுக்கு குடியேற்றத்திட்ட வசதி!

## பாதிப்புற்ற அரச ஊழியருக்கு இடமாற்றம்

### 'அமிர்' — பிரதமர் சந்திப்பில் ஏற்பட்ட உடன்பாடு

கொழும்பு, வெள்ளி

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு பிறஇடங்களுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ள 1000 தமிழ் மக்களை திருக்கேதீஸ்வரம் முருங்கன், மடுறோட் ஆகிய பகுதிகளில் குடியேற்றுவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது. இத்தகவலை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்களில் ஒருவருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் இன்று பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

நேற்று பிரதம மந்திரியுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் குழு நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை திரு. அமிர்தலிங்கம் இன்று பத்திரிகையாளர் மகாநாட்டில் வெளியிட்டார்.

அனுராதபுரம், கலாவெவ, குருநாகல் ஆகிய பகுதிகளில் சேவையாற்றி வன்செயல்களால் இடம் பெயர்ந்துள்ள தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்கவும் பேராதனை குண்டசாலை வளாக மாணவர்களை யாழ். வளாகத்துக்கு இடமாற்றம் செய்யவும் அரசு இணங்கியுள்ளது என திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். தீயிடப்பட்ட லொறி உரிமையாளர்களுக்கு உடனடியாக லொறி சட்டங்களை இறக்குமதி செய்து கொடுக்கவும் அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்கள் குறித்து தனிநபர் விசாரணைக் கமிஷன் அமைக்கப்படுமென்றும், ஓய்வு பெற்ற முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு ஐ. என். சி. சன்சோணி தலைமையிலே இக்கமிஷன் இயங்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு அமிர்தலிங்கம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இக் கமிஷனை உடனடியாக ஏற்படுத்தும்படி வலியுறுத்தியுள்ளார் தமக்கு கிடைத்துள்ள அறிக்கைகள், சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், சட்டமா அதிபர் தனது அறிக்கையை வெளியிட்டதும் விசாரணை ஆரம்பமாகுமெனவும் பிரதமர் பதிலளித்துள்ளார்.

குண்டசாலையில் விவசாய போதனை பெற்ற மாணவர்கள் அனைவரும் மட்டக்களப்பிலுள்ள கரடியன் ஆற்றிலுள்ள விவசாயக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்படுவர். பேராதனை வளாக மாணவர்கள், யாழ்ப்பாண வளாகத்திற்கும், யாழ்ப்பாண வளாக சிங்கள மாணவர்கள் பேராதனைக்கும் இடமாற்றம் செய்யப்படுவர்.

அனுராதபுரம், கலாவெவ, குருநாகல் பகுதிகளில் கடமையாற்றிய அரசாங்க ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்படுவர். மற்றைய திணைக்களங்களிலும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் இடமாற்றம் வழங்கப்படும். பாதிப்புற்ற தமிழ் ஆசிரியர்களுக்கும் இச்சலுகை வழங்குவதற்கு அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

அகதிகள் முகாம்களில் இருக்கும் 1000 பேருக்கு திருக்கேதீஸ்வரம், முருங்கன், மடுறோட் ஆகிய பகுதிகளில் குடியேற்ற காணிகள் வழங்கப்படும். வவனியாவிலும் காணிகள் வழங்கப்பட வேண்டுமென திரு. அமிர்தலிங்கம் கோரிக்கை விடுத்தபோது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் கூறுதியளித்துள்ளார்.

கலவரங்களினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, தலா 3000 ரூபா வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள

(6ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தின் முன் யாவரும் சமமே!!

# சிங்களம் தெரியாதவர்கள் பாதிக்கப்படலாகாது!

# தமிழர் பிரச்னையை தெரிவுக்குழு ஆராயும்

## பேரவையில் பிரதமர் உறுதி

கொம்பூபு, வெள்ளி

**சிங்களம் தெரியாது என்பதற்காக எந்த ஒருவரும் பாதிக்கப்படலாகாது. சட்டத்தின்முன் சகலரும் சமமாகவே மதிக்கப்படவேண்டும்.**

**இவ்வாறு பிரதம மந்திரி திரு.ஜே.ஆர்.ஜயவர்தன இன்று தேசிய அரசுப் பேரவையில், அரசியல் சட்ட திருத்த மசோதாவிற்கு விளக்கமளித்து பேசுகையில் குறிப்பிட்டார்.**

தமிழ் மக்களின் பிரச்னைகள் பற்றி தேசியப் பேரவை தெரிவுக்குழுவொன்று ஆராயும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பரீட்சைகளில் புள்ளிகள் வழங்கும் முறையில் தரப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதை பிரதம மந்திரி குறிப்பிட்டார். இது தொடர்பாக பௌத்த காங்கிரஸ் குழுவொன்று தம்மை சந்தித்துப் பேசியதை சுட்டிக்காட்டிய பிரதமர், எவருக்கும் பாகுபாடுகாட்டப்படுவதை புத்தபெருமான் ஆதரிக்கவில்லை யென்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறியதாகவும் பௌத்த தர்மத்தின் சார்பில் பேசுகிறீர்களா வேறு யாருக்காகவும் பேசுகிறீர்களா என அவர்களிடம் வினவியதாகவும் சொன்னார். பௌத்த தர்மத்தின்படி இந்த நாட்டைக் கட்டியெழுப்ப அரசு உறுதி பூண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார். பின் தங்கிய பகுதி மாணவர்களின் குறைகளை நீக்க ஏற்பாடு செய்யப்படும் என்ருர்.

### சுதந்திரங்கள்

மக்களின் இறைமை தேசிய அரசுப் பேரவையிடமும் ஜனாதிபதியிடமும் இருக்கும். அடிப்படை சுதந்திரம், நீதி பரிபாலன சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் யாவும் பேணிப்பாதுகாக்கப்படும். ஆயுதப் படைகளுக்கு ஜனாதிபதியே பொறுப்பாக இருப்பார் என்று பிரதமர் தெரிவித்தார்.

இத்திருத்தச் சட்டத்துக்கு மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளார்கள் எனவே இப்போது ஜனாதிபதியை மக்கள் தெரிவுசெய்ய வேண்டியதில்லை. இப்போதைய பிரதமரே ஜனாதிபதியாக வரலாம்.

இந்த திருத்தம் மக்கள் அளித்த அதிகாரத்தைக் கொண்டு செய்யப்படுகின்றது. இந்த அரசு ஆறு வருடங்களுக்குமேல் பதவியிலிருக்கப் போவதில்லை. அமைச்சர் அவையில் இல்லாத அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கும் என்ருர் பிரதம மந்திரி.

### ரேகண விஜயவீர விடுதலையாவார்

சிறையில் உள்ள கிளர்ச்சிக்காரர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படும் என்று பிரதம மந்திரி கூறினுர். கிளர்ச்சிக்காரர்களின் தலைவர் திரு. ரோகண விஜயவீராவுக்கு விடுதலையளிக்கப்படும். குற்றவியல் நீதிக்கமிஷன் சட்டத்தைத் திருத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறன.

### ஒழுங்கு அவசியம்

ஆயுதப் படைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் அவசியம் என்பதைப் பிரதம மந்திரி வலியுறுத்தினுர். எம். பீக்களும் கூட சட்டத்தை மீறி நடக்கலாகாது.

நுவரெலியாவில் நடந்த ஒரு சம்பவம் பற்றி குறிப்பிட்ட பிரதமர், அங்கு இ.போ.சபை ஊழியர்கள் சம்பந்தமான ஒரு சம்பவத்தில் இரு பொலிஸாருக்கு எதிராக பொலிஸ் அதிபர் சண்முகம் நடவடிக்கை எடுத்தார் அவர்கள் சகவின விடுமுறையில் நின்றனர். அவர்களை நிரந்தரமாக நிறுத்திவிட அரசு பணிந்துள்ளது. என்று பிரதமர் சொன்னுர். விடுதலையாகும் கிளர்ச்சிக்காரர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஈடுபட அனுமதிக்கப்படுவர் என்ருர்.

### மாவட்ட மந்திரிகள்

மாவட்ட மந்திரிகள் பதவிக்கு இப்பொழுதே பலர் முன் வருகிருர்கள் ஆனுல் எம். பிக்களே மாவட்ட மந்திரிபதவிகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என்ருர் பிரதமர்.

நிர்வாகத் தலைவராகவும் நாட்டின் தலைவராகவும் ஜனாதிபதி இருப்பார் முன்பு போல் பிரதமமந்திரியின் ஆலோசனைகளைப் பெற வேண்டிய அவசியம் இருக்காது. மக்களின் இறமை பாதிக்கப்படமாட்டாது என்ருர். இந்தச்சமயத்தில் டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியவர்கள் சபையில் இல்லாதது கவலையளிக்கிறது என்ருர் பிரதமர்.

பட்டிருப்பு இரண்டாவது எம். பி. திரு. கனகரத்தினம் இன்று பேரவையில் தமிழில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். சபை மீண்டும் அடுத்தமாதம் 4-ம் திகதி கூடும். (ம)

# முகாம்களுக்கு வெளியில் 2000 அகதிகள்

## கூட்டணி செயலகத்திலும் தஞ்சம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், அகதிகள் முகாம்களுக்கு வெளியில் தனியார் வீடுகளிலும் தோட்டங்களிலும் சுமார் 1500 அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவை தவிர கிளிநொச்சி எம். பி. யின் காரியாலயத்திலும் வீதியோரங்களிலும் சுமார் 500 அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தமிழர்விடுதலைக் கூட்டணி காரியாலயத்திலும், அகதிகள் குடும்பங்கள் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு அப்பகுதி மக்கள் உணவு வழங்கிவருகின்றுர்கள்.

இவர்கள் மாத்திரமே, தம்

(6-ம் பக்கம் பார்க்க)

# 'அறைக்குள் என்னை பூட்டி வைத்திருப்பார்கள்'

## விவாகரத்துவழக்கில்பெண்சாட்சியம்

மட்டுவில், வெள்ளி

'நான் எனது கணவர் வீட்டில் சிறை வாழ்க்கையே வாழ்ந்து வந்தேன். என்னை அறையினுள் பூட்டியேவைத்திருந்தனர். எனது மாமியும் மச்சாளும் என்னைக் கொடுமைப்படுத்தினர். நான் யாருடனும் பேசக்கூட அனுமதிக்கவில்லை.'

இவ்வாறு விவாகரத்து வழக்கொன்றில் சாட்சியமளித்த பிரதிவாதியான பெண் நாகேஸ்வரி கூறினார். நுணாவில் கிழக்கைச் சேர்ந்த செல்லன் தில்லையம்பலம் என்பவர் தனது மனைவியிடமிருந்து விவாகரத்துக் கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக சகல வளாக தமிழ் மாணவர், விரிவுரையாளர்கள் அமைப்பு

## பொதுக் கூட்டம்

வரும் ஞாயிறு (25-9-77) காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சகல வளாகங்களினதும் ஆயுள்வேத மருத்துவ நிறுவனம், அம்பாறை தொழில்நுட்பக் கல்லூரியினது மாணவர்களும் விரிவுரையாளர்களும் கூட்டத்தில் பங்குபற்ற அழைக்கப்படுகின்றனர்.

அ. தட்சணாமூர்த்தி,
செயலாளர்.

7204

---

புத்தூர் கிராமாட்சி மன்றம்

## கேள்வி விளம்பரம்

### அரசாங்க நன்கொடை - வீதி வேலைகள் — 1977

புத்தூர் கிராமப் பிரதேச விசேட ஆணையாளரால் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வீதி வேலைகள் தொடர்பான கேள்விகள் 7-10-77-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வோர் வேலைகள் தொடர்பான கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப்பணம் ரூபா 100/-ம் பத்திரப்பணம் ரூபா 15/-ம் கட்டியதன் பேரில் 4-10-77-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை வழங்கப்படும்.

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பெற்று ஒரு பிரதி இவ்வலுவலகத்திற்கும், மறு பிரதி யாழ்ப்பாண உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

### வேலை விபரங்கள்

1. புன்னைக்குளம் வீதி வேலை — வட்டாரம் இல. 9.
2. பனந்தோட்ட வீதி வேலை — வட்டாரம் இல. 2
3. அச்செழு-கரந்தன் வீதி வேலை — வட்டாரம் இல. 17
4. நிலாவரை (எல்லாளன்) வீதி வேலை — வட்டாரம் இல. 7
5. அந்திராணை வாதரவத்தை வீதி வேலை — வட்டாரம் இல. 5
6. கொய்வளை வீதி வேலை — வட்டாரம் இல. 10
7. காளியாணை (சொக்கத்திடல்) வீதி வேலை — வட்டாரம் இல. 4

கா. மாணிக்கவாசகர்,
விசேட ஆணையாளர்,
புத்தூர் கிராமப்பிரதேசம்.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
புத்தூர் கிராமப்பிரதேசம்,
22-9-77.

7206

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

கந்தசாமி சத்தியநாதன், காங்கேசன்துறை.
வழக்காளி

எதிராக

இல. M. B/ 11993

1. கதிரவேலு துரைசாமி அலியஸ் சிவகுருவும்
2. அவரது மனைவி பூரணம் இருவரும்

மயிலிட்டிக் கரையோரம், மயிலிட்டி,
எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/11993-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ந் திகதி (5-10-77) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 6310/-ம் 16-9-70 தொடக்கம் 11-2-71 வரைக்கும் ரூபா 5000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 462/31. இதில் கொடுபட்டது ரூபா 6210/-.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப்பிரிவு மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை "தொட்டுவாய்" நில. பர. 12ம் பனைமரங்களும் தெற்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு தண்ணீர்வாய்க்கால், தெற்கு பிரான்சிஸ் ஆகதிஸ்சின் ஆதனம், வடமேற்குப்பக்கத்திலுள்ள தண்ணீர் வாய்க்காலுக்குக் கொடுபட்ட ஆதனம். புறநீங்கலாக அது முழுவதடங்கலும்.

க. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
03-09-1977

7292

---

## பிஸ்கால் விற்பனை அறிவித்தல்

வடமாகாணம்
நீதவான் நீதிமன்றம்.
ஊர்காவற்றுறை.

வழக்கு இல. 219

கதிர்காமு தம்பிப்பிள்ளை,
வெடியரசன் வீதி,
காரைநகர்.
வழக்காளி

எதிராக

1. புண்ணன் கந்தையாவும் பெண்
2. நாகம்மாவும், இருவரும்

இலந்தைச்சாலை,
காரைநகர்.
எதிராளிகள்

எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் 1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 2-ம் திகதி 10 மணியிலிருந்து, இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை குறித்த காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது. விற்பனைத் தொகையிலிருந்து ரூபா 950/ம் மேலும் ரூபா 725/-க்கு 1975-8-13 தொடக்கம் 1975-12-3 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10வீத வட்டியும் பின்முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் அறவாக்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவ வடக்இறை. மல்லிகை நி. பரபத்தும் வீடுகளும் கிணறும் பனைகளும் தென்னைகளும் எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் பராசக்தியினுதனம். வடக்கு நாகமணி செல்லையாவினுதனம், மேற்குத் தெரு. தெற்கு தில்லையம்பலம் கணபதிப்பிள்ளையினுதனம் இதடங்கலும்.

இது 1968-7-1 இல் ரூபா 3000/க்கும் பத்து வீதவட்டிக்கும் ஈடாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பேரால் ரூபா 1500/- கொடுக்கப்பட்டது.

தா. குலஞானம்
பிஸ்கால்/பதிவாளர்,
நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை.

7184

---

## கிராமசபை பண்டத்தரிப்பு கேள்வி விளம்பரம்

பண்டத்தரிப்பு கிராமச்சபை விசேட ஆணையாளரால்1977ம் ஆண்டு ஐப்பசி மாதம் 7-10-77 திகதி காலை 10 00 வரைக்கும் கீழ்காணும் வேலைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் உத்தியோகபூர்வமான கேள்விப்பத்திரங்கள் கேள்விப்பத்திரப் பணம் ரூபா 50-00 பத்திரப்பணம் ரூபா 10-00 கிராமச்சபைக் கந்தோரில் 6-10-77 காலை 12-00 மணிக்குமுன்கட்டி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் கிராமச்சபைக் கந்தோரில் அறிந்து கொள்ளலாம்.

### வேலையின் விபரம்

கண்ணகை அம்மன்கோவில் ஒழுங்கை — மாகியப்பிட்டி சுன்னாகம் றோட்.

கி. கோபாலரத்தினம்
விசேட ஆணையாளர்
பண்டத்தரிப்பு.
கிராமச்சபை.

கிராமச்சபை,
பண்டத்தரிப்பு,
22-9-77.

7197

---

## சமாதானக் குழு அங்கத்தவர்

வவுனியா, வெள்ளி

வவுனியாப்பகுதி ஐக்கிய தேசியக்கட்சிஅமைப்பாளரான திரு. கா. த. புலேந்திரன் வவுனியாவின் சமாதானக்குழு அங்கத்தவர்களின் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மாடிவீட்டுடன்ஐந்துபரப்புக் காணியும் புறம்பான மூன்று பரப்புக் காணியும் மல்லாகம் க்காட் வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். 95, கோவில் வீதி, நல்லூர். 7200

சின்தெட்டிக் சாறி 59-40 சதத்துக்கும், சூட்டிங் யார் 18-50 சதத்திற்கும் விற்பனைக்குண்டு. ஆறுமுகம் ரெக்ஸ் ரைல்ஸ், இல: 20, கிருன் பஜார், யாழ்ப்பாணம். 7209

## தேவை

பாண் உற்பத்தி செய்வதில் அனுபவம்உள்ளவர்கள் உடன் தேவை 25-9-77 ஞாயிறு பி. ப, 3-00 க்கு முன் நேரில் வரவும். உரிமையாளர்' பொ. சுப்பிரமணியம், ஏழாலை மகாவித்தியாலயம் (அருகாமை) ஏழாலை. 7191

---

## அறிவித்தல்

### சோலைவரி 3-ம் கந்தாயம் 1977

மேற்படி பணம் செலுத்துவதற்கு வழங்கப்பட்ட சலுகைக் காலத்தவணை ஒருமாத காலம் நீடிக்கப்பட்டுள்ளதென வரி செலுத்துவோருக்கு அறிவிக்கப்படுகிறது. எனவே 1977-ம் ஆண்டின் 3-ம் கந்தாய காலத்தவணைக்கான மதிப்பீட்டு வரிகள் 1977-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு முன்னர் இக்காரியாலயத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10 சத விகிதம் வராந்தச் செலவுப் பணமும் மேலதிகமாக அறவிடப்படும்.

இ. துணிகாசலம்,
விசேட ஆணையாளர்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானைப் பட்டணம்,
சங்கானை,
22-9-77. 7199

---

சுன்னாகம்
ப. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்.

## கேள்வி விளம்பரம்

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் 3000 க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. கேள்விப்பத்திரங்களைப் பெற விரும்புவோர் காரியாலய வேலை நேரங்களில் மீளளிப்பு வைப்புப் பணமாக ரூபா 250/ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 30-9-77 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் வைக்கப்படும் தபால் உறைகளில் அரக்கு முத்திரையிட்டே ஒப்படைக்க வேண்டும். 30-9-77-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் உடைக்கப்படும்.

பொதுமுகாமையாளர்
(சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம்)

22-9-1977

7198

---

## தேவை

வீட்டில் சமையல் வேலைகளைக் கவனிக்கவும் வீட்டைப் பராமரித்துப் பாதுகாந்துக் கொள்ளவும் கூடிய முப்பத்தைந்து வயதிற்கும் நாற்பத்தைந்து வயதிற்கும் இடைப்பட்ட மாது தேவை. குறிப்பாக இந்துசமயப் பெண்ணுக இருத்தலவசியம். உரிமையாளர், சி. எஸ். கே. ஸ்தாபனம் (பொன்னம்மா மில்), 11,கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். 7202

லேத் வேலை, பிற்றிங்வேலை தெரிந்தவர்கள் தேவை. நேரில் வரவும். ராதா மெசின் கம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7167

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள 4 ஸ்ரீ 3763 டட்சன் புளுபேட் கார் விற்பனைக்குண்டு. அழகான நீல நிறம். புதிதாய் வாங்கி கம்பனி அதிபரின் சொந்தப் பாவிப்பிற்கு யாழ்ப்பாணத்திலேயே பாவித்தது அதிகக்கூடுதலான விலை ஏற்றுக்கொள்ளப்படும். அரசரத்தினம், 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7175. 7188

உடுவில் அங்கிரெல் கிழக்கு ஒழுங்கையில் மகளிர் கல்லூரிக்கு சமீபமாக வீடுகட்டக் கூடிய 60 பேச்சஸ் காணி விற்பனைக்குண்டு. நல்லதண்ணீர், மின்சார வசதியுள்ள இடம். ஒரு பேச்சஸ் ரூபா 420/-. விபரங்களுக்கு திருமதி K. குணரத்தினம், "கமலஸ்தான்" அங்கிரெல் ஒழுங்கை, உடுவில். 7154

வெளிநாடு செல்லவிருக்கும் ஒருவரது புதிய அக்காய் ரியூனர் அம்பிளிபயர், அக்காய் கஸட்டெக், அக்காய் ரெக்கோட்பிளேயர், ரியாக் (Teac) ரெக்கோட்பிளேயர். நாஷனல் றேடியோ, கஸட் 5410, சன்யோ பான் (ஸ்ராண்டுடன்) விற்பனைக்குண்டு. பற்றுச்சீட்டுடன் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: நித்தியானந்தன், 48/1, ஸ்ரான்லி றோட், (ஸ்ரீதர் தியேட்டர் முன்னால்) யாழ்ப்பாணம். 7163

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அராலி வீதியில் இரண்டு பரப்பு காணி கல்வீட்டுடனும் கடையுடனும் விற்பனைக்குண்டு. செ. சற்குணனந்தன். 26, அராலி, றோட், யாழ்ப்பாணம். 7205

## வகுப்புகள்

வகுப்புக்கள் 27-9-77-ல் தொடங்குகிறது. இலவசமாக எல்லா வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. தொடர்பு நிர்வாகி, மொடேர்ன் இன்ஸ்டிடியூட், கோப்பாய் சந்தி, கோப்பாய். 7195

சாதாரண தர பரீட்சைக்கான இலவச மாலைநேர மீட்டல் வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. New Jaffna Law Centre 23, இரண்டாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். 7187

## தவறிவிட்டது

23-9-77 காலை இணுவிலில் இருந்து யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிக்கு செல்லும் வழியில் பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகளுடன் பிறவுண்கலர் சூட்கேஸ் தவறி விட்டது. மேலே TRS என நீல எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். திருமதி இ. அமிர்தலிங்கம், 'சிவசக்தி' கே. கே. எஸ். வீதி, இணுவில். 7196

# இந்தியத்தூதருக்குகொலை பயமுறுத்தல்கடிதம்!

## 20 நாள் அவகாசத்தில் லட்சம் டாலர் கேட்கிறது 'ஆனந்தமார்க்' இயக்கம்!

கன்பரா, செப். 23

'ஆனந்த மார்க்' இயக்கத்திற்கு ஒரு லட்சம் டாலர் பணம் வழங்காவிடின் ஆஸ்திரேலியாவில் உள்ள இந்திய தூதுவரும் தூதரக அதிகாரிகளும் கொலைசெய்யப்படுவார்கள் என்று கன்பராவில் உள்ள இந்திய தூதுவருக்கு மிரட்டல் கடிதம் ஒன்று கிடைத்துள்ளது.

நேற்றுக் காலை கிடைத்த இந்த அநாமதேயக் கடிதம் சிட்னியை அடுத்துள்ள நகர் ஒன்றிலிருந்து அனுப்பப்பட்டுள்ளதாக தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 20 நாட்கள் அவகாசம்

அடுத்த 20 நாட்களுக்குள் தாம் கேட்டபடி ஒரு லட்சம் டாலர் பணத்தையும் தமக்கு அனுப்பிவைக்குமாறும் ஆஸ்திரேலிய தூதரகத்தில் உள்ள பொலிஸ் காவலை உடன் அப்புறப்படுத்துமாறும் அந்த மிரட்டல் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது என்றும் தூதுவர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவிலுள்ள இந்திய தூதரகத்தின் இராணுவ அதிகாரியை அவரது வீட்டில் வைத்து கத்தியால் குத்திவிட்டு அந்த அதிகாரியின் மனைவியை துப்பாக்கிமுனையில் கடத்திச் செல்ல மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடைந்ததும் சிலவாரங்களுக்கு முன்னர் தூதரகத்திற்கு தீ வைக்கப்பட்டதும் தெரிந்ததே. (இ)

## காங்கிரஸ் முடிவு

சென்னை, செப். 24

காந்தி ஜெயந்தி தினமான அக்டோபர் 2ம் திகதியை 'ஹரிஜனர்கள்' தினமாக அனுஷ்டிப்பது என்று தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி தீர்மானித்துள்ளதாக முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் தெரிவித்தார். (இ)

## மொரார்ஜியுடன் எம். ஜி. ஆர். கர்நாடகம்பயணம்

சென்னை, செப். 23

காவிரி நீர்ப்பிரச்னை தொடர்பாக இன்று தமிழ்நாடு முதல்வர், திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்சும் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் முன்னிலையில் சந்தித்துப் பேசவிருக்கிறார்கள்.

தமிழ்நாடு வந்திருந்த பிரதம மந்திரி தேசாயுடன் திரு. ராமச்சந்திரன் இன்று கர்நாடகத்திற்குப் போனார்.

## ஊழலைத் தோற்றுவித்த இந்திராவையும் சகாக்களையும்விசாரணைசெய்க

### அறிஞர்கள் அரசிடம் கோரிக்கை

புதுடில்லி, செப். 23

இந்திய அரசியல் சாசனத்தை உதாசீனம் செய்து எதேச்சாதிகாரத்தையும் லஞ்ச ஊழலையும் தோற்றுவித்த முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திமீதும் அவரது அமைச்சர்கள், சகாக்கள்மீதும் உடன் விசாரணை நடத்தவேண்டும்.

இவ்வாறு இந்தியாவின் பிரபல அறிஞர்கள் 15 பேர் மத்திய அரசைக் கேட்டுள்ளனர்.

நெருக்கடி நிலையைப் பிறப்பிக்க காரணமாக இருந்த சகலர்மீதும் உடன் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்றும் இதற்காக இப்போது நடைமுறையிலிருக்கும் சட்டங்களைத் திருத்தி அமைக்கவேண்டும் என்றும் அந்த அறிஞர்கள் தமது வேண்டுகோளில் கேட்டுள்ளனர்.

ஜனதா கட்சி ஆட்சியில் ஏதோ சதி நடப்பதாகவும் ஏழை மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றும் திருமதி காந்தி ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றார் என்றும் அவர்கள் வியப்புத் தெரிவித்தனர். (இ)

## அஞ்சலி செலுத்தினர்

சுழிபுரம், வெள்ளி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவரும் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்தவருமான செல்வன் எஸ். செல்வசிங்கம் காலமானார்.

இவரது இறுதிக் கிரியைகளில் கூட்டணிப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (உ)

## விமான விபத்து 23 பேர்பலி

புடாபெஸ்ட், செப். 23

ஹங்கேரியில் நேற்று நடைபெற்ற விமான விபத்தில் 23 பேர்பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

53 பேர் பிரயாணம் செய்த இந்த விமானத்தின் சிப்பந்திகள் 8பேரும் இந்த விபத்தில் கொல்லப்பட்டனர். (இ)

## வவனியா, மன்னாரில் ஆயிரம் அகதிகள்!

வவுனியா, வெள்ளி

வவுனியா, மன்னார்ப்பகுதிகளில் உள்ள முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் சுமார் 1000 அகதிகள் தங்கியிருக்கின்றனர்.

மன்னார் எம். பி. திரு. சூசைதாசனின் வேண்டுகோளைத் தொடர்ந்து பூநகரி முகாமிலிருந்து சுமார் 500 அகதிகள் மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

திருக்கேதீஸ்வரம் கோவில் மடங்களிலும் சுமார் 150 அகதிகள் தங்கியுள்ளனர்.

வவுனியா அகதிகள் முகாமில் 200 அகதிகள் இருக்கின்றனர்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் சுமார் 500 அகதிகளை, வவுனியாவிலுள்ள தனிப்பட்ட காணிகளில் குடியேற்றுவதற்காக அழைத்து வந்துள்ளார்.

இவைதவிர வவுனியாவின் தனியார் வீடுகளிலும், நெடுங்கேணியில் பல இடங்களிலும் அகதிகள் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல இடங்களில் அகதிகள் தங்கியுள்ளனர். இவைதவிர கதிர்காமம் மடத்திலும் நூற்றுக்கணக்கான அகதிகள் தங்கியுள்ளனர்.

இவர்களில் அநேகர், முகாம்களிலிருந்து தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று அங்கு வாழ முடியாத சூழ்நிலையிருப்பதால், யாழ்ப்பாணத்திற்கு வந்துகொண்டிருப்பதாக அகதிகள் தெரிவித்தனர். (க)

## பொதுமக்கள் அவதி

அரியாலை, வெள்ளி

பொதுச் சொத்துக்களை களவாடும் கோஷ்டியினரின் தொல்லைகள் யாழ்ப்பாண நகரில் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகிறதாம்.

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையச் சந்தியில் எரிந்துகொண்டிருந்த மேர்குரி மின்பல்ப்பை திருட முற்பட்ட கள்ளக் கோஷ்டியினர் பல்ப்பைக் கழற்றமுடியாத காரணத்தினால் பல்ப் இணைக்கப்பட்டிருந்த பைப்பையே வளைத்து பல்ப்பைச் சேதமாக்கியுள்ளனர். இதனால் அவ்வீதிவழியாகச் செல்லும் மக்கள் மின் வெளிச்சம் இல்லாமல் பெரும் கஷ்டமடைகின்றனர்.

இவ்விடயம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குபடியும் இச்சந்திக்குமின்விளக்கொன்று இணைக்கும்படியும் காந்தி நிலையச் செயலாளர் யாழ். மாநகர விசேட ஆணையாளரைக் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

## அரசியல் அமைப்பை திருத்தி

# பிரதம நீதியரசர் பதவி நீக்கம்

### பாக். இராணுவ அரசு நடவடிக்கை

இஸ்லாமாபாத். செப். 23

பாகிஸ்தான் பிரதம நீதியரசர் ஜனுப் யாஹூப் அலி இராணுவ அரசினால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சிறையிலிருக்கும் முன்னாள் பிரதமர் ஜனுப் சுல்பிகார் அலிபூட்டோவைப் பிணையில் விடுதலை செய்யக் கோரித் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணை செய்ய இணக்கம் அளித்ததைத் தொடர்ந்தே ஜனுப் அலி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஜனுப் அலியை பதவி நீக்கம் செய்வதற்காக நீதியரசர்களுக்கான ஓய்வுபெறும் வயதை 70ல் இருந்து 65 ஆக குறைக்கும் வகையில் பாகிஸ்தான் அரசியல் அமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டே இப்பதவி நீக்கம் செய்யப்பட்டது. (இ)

## "பூச்சி தொழிற்சாலை"

மாஸ்கோ, செப். 23

சோவியத் யூனியனில் பூச்சிகளை உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் சில இயங்கி வருகின்றன.

பழத் தோட்டங்களிலும், மரக்கறித் தோட்டங்களிலும், வயல்களிலும் இருக்கும் கிருமிகளை அழிக்க வல்ல பூச்சிகளையே மேற்படி தொழிலகங்கள் உற்பத்தி செய்கின்றன.

இத்தகைய பூச்சி தொழிற்சாலைகளில் ஒன்றைஅண்மையில் பல்கேரியாவுக்கு சோவியத் யூனியன் ஏற்றுமதி செய்தது.

சோவியத் யூனியனில் உள்ள பூச்சி உற்பத்தி உற்பத்தி தொழிலகமொன்று நாளொன்றுக்கு சராசரி 300 லட்சம் கிருமி கொல்லும் பூச்சிகளை உற்பத்தி செய்கின்றதாம். (இ)

## வவுனியாவில் இராணுவ முகாம்

வவுனியா, வெள்ளி

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான பொதுசன நூல் நிலையமும் வவுனியா வாடிவீடும், பொதுசன நூல் நிலையத்திற்கு முன்பாக உள்ள பகிரங்க சேவைக் கழகமும் இராணுவமுகாம்களாக மாற்றப்பட்டுள்ளன.

பொதுசன நூல்நிலையத்திற்கு வரும் தினசரிப் பத்திரிகைகள் யாவும் நகரசபை கட்டிடத்தில் உள்ள அறை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளன.

## சிமெந்து தட்டுப்பாடு நீங்கும்

கொழும்பு, வெள்ளி

நாட்டில் நிலவும் சிமெந்து தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு வெளிநாடுகளிலிருந்து சிமெந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று பிலிப்பைன்ஸ் குடியரசிலிருந்து 9,000 தொன் சிமெந்து கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்தது. அடுத்த வாரம் 'ரவி' என்னும் சரக்குக் கப்பல் மணிலாவிலிருந்து 6,000 தொன் சிமெந்தை ஏற்றிவரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மணிலாவிலுள்ள வர்த்தக கூட்டுத்தாபனமொன்றுடன் கூட்டுறவு மொத்த விற்பனவுஸ்தாபனம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஒவ்வொருமாதமும் 5,000 முதல் 10,000 தொன்சிமெந்து வரைஇலங்கை வந்து சேரவிருக்கிறது.

## வாசகர்கள் தொகை கூடியநாடு

மாஸ்கோ, செப். 23

உலகில் வாசகர்களின் தொகை கூடிய நாடு சோவியத் யூனியனே என யுனெஸ்கோ புள்ளி விவபரங்கள் தெரிவிக்கின்றனர்.

சோவியத் யூனியனில் 1918-1976 காலப் பகுதியில் 28 லட்சம் நூல்களும் சிறு புத்தகங்களும் மொத்தம் 4,600 கோடி பிரதிகளில் பிரசுரமாகியுள்ளன.

42,000 லட்சம் நூல்களை கொண்ட 350,000 நூலகங்கள் சோவியத் யூனியனின் பல பாகங்களிலும் உள்ளன. (இ)

# மாவட்டந்தோறும் வளாகங்கள்!

## கல்விஅமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

நாட்டின் இருபத்திரண்டு மாவட்டங்களிலும் இருபத்திரண்டு வளாகங்கள் திறக்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு வளாகம் என்ற திட்டத்தில் முதலில் மாத்தறையிலும் மட்டக்களப்பிலும் இரண்டு வளாகங்கள் அமைக்கப்படும்.

இதுபற்றி கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜேயரத்ன கருத்துத் தெரிவிக்கையில், பல்கலைக் கழக கல்விக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியையும் பல்கலைக் கழக அனுமதிபெறும் மாணவர்களின் இடநெருக்கடியையும் நீக்குவதற்கு ஒரேவழி; இலங்கை பல்கலைக் கழகத்தின் வளாகங்களைப் பரவலாக ஆரம்பிப்பதுதான் என்று கூறினர்.

## மர்ம மரணம்

கிரித்தல, வெள்ளி

காட்டுக்குச் சென்ற ஒருவர் மனித மண்டை ஓடு ஒன்றும் சில எலும்புகளும் காட்டினுள் கிடக்கக் கண்டாராம்.

பொலநறுவ பொலிசாருக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டதையடுத்து ஸ்தலத்திற்கு அவர்கள் விரைந்தனர்.

வெற்றுச்சாராயப் போத்தல் ஒன்றையும் பொலிசார் ஸ்தலத்தில் கண்டெடுத்தனர்.

இனந்தெரியாத இந்நபர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனப் பொலிசார் நம்புகின்றனர். (உ)

### அகதிகள் முகாமில் சிலமணி நேரம் (3)

# நண்பகல் பதினொருமணி ஆகியும் காலை உணவு கிடைக்கவில்லை!

கிளிநொச்சி நவீன சந்தையிலுள்ள அகதிகள் முகாமில் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரும், குடும்பத்துடன் இருப்பதாக பொறுப்பாளர் இராசேந்திரம் என்னிடம் கூறிய போது அவரைச் சந்தித்து சம்பவம் பற்றியவிபரம் அறிய விரும்பினேன்

அவர்கள் தங்கியிருந்த மண்டபத்திற்கு சென்றபோது அவர் அங்கில்லை. அவரது மனைவியும் பிள்ளைகளுமே அங்கிருந்தனர். அகதிகளாகவந்த போது கையுடன்கொண்டு வந்த சில சாமான்களுடன் அவர்கள் அங்கிருந்தனர்.

**அகதியாக வந்த சிறை பாதுகாவலர்**

அவர் ஒரு சிறைச்சாலை பாதுகாவலர் அநுராதபுரத்தில் கடமையாற்றி வந்தவர். அவர் பெயர் வீரசிங்கம்.

'ஐயா எங்கே?' என்று கேட்டேன்.

'அவர் கொழும்பிற்குசென்று விட்டார். இடமாற்ற விஷயமாக' என்று ஒரு பெண் பதிலளித்தார். அது அவருடைய மூத்த மகளாக இருக்க வேண்டும் அவர்கள் குடும்பத்தில் 9 பேர்

தாங்கள் செல்லத்துரை தோட்டத்தில் வாழ்ந்துவந்ததாகவும், பாதுகாப்பாகவேறு ஒரு வீட்டிலிருந்துவிட்டு போய்ப்பார்த்த போது தங்கள் வீடு உடைக்கப்பட்டு இருந்ததாகவும் அவர் சொன்னார்.

''உங்களின் சொந்த ஊர்?''

'சாவகச்சேரியில் சங்கத்தானைதான் சொந்த ஊர்' என்றார்.

**உறவினர் இருந்தும்...**

'அப்படியானல் உறவினர்கள் இல்லையா? என்றேன்.

'இருக்கிறார்கள் நாங்கள் போவதில்லை''.

68-ம் ஆண்டு தாங்கள் யாழ்ப்பாணத்தி லிருந்ததாகவும் அதன்பின் குருகமாவிற்கு சென்றதாகவும் பின் அங்கு வந்ததாகவும் அவர் கூறினார்.

'எங்கே படித்தீர்கள்?' என்று கேட்டேன்.

'என் சகோதரிகள் அநுராதபுரம் கன்வெண்டில் தான் படித்தார்கள்'' என்றார்.

செல்லத்துரை தோட்டத்தில் 12 குடும்பங்கள் வசித்ததாகவும் எல்லாக்குடும்பங்களும் கலவரத்தின் போது பாதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**கா. யோகநாதன்**

''ஏதாவது சம்பவங்களை நேரில் கண்டீர்களா? என்று கேட்டேன்.

அகதிகள் முகாமிற்குவரும் போது வழியில் கடைகள் எரிவதை கண்டதாக கூறினார்.

தங்கள் வீட்டிலுள்ள மெஷின், மேசை, கதிரை மற்றும் தளபாடங்கள்யாவும் சேதமடைந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

'இது எப்படி தெரியும்?'

'நாங்கள் முகாமிற்கு வந்து விட்டு பின் பாதுகாப்புடன் போய்ப்பார்த்தோம்'' என்றார்.

'அநுராதபுரத்தில் எவ்வளவுகாலம் இருக்கிறீர்கள்?'

'இந்த வருடம்தான் அநுராதபுரத்திற்கு வந்தோம்''.

'ஐயா என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறார்?'' என்று கேட்டேன்.

'யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்று இங்கு இருக்க யோசித்திருக்கிறார்' என்றார்.

**காலை உணவு கிடைக்கவில்லை!**

அன்று அவர்களுக்கு நண்பகல் 11 மணியாகியும் காலை உணவு கிடைக்கவில்லை. எல்லாருக்கும் பசிக்களைப்பு சோர்ந்து போய் இருந்தார்கள். காலை உணவு வரத்தாமதத்தினால் அகதிகள் எல்லோருக்கும் அன்று காலை உணவுவழங்கப் படவில்லை.

அங்கிருந்து புறப்பட்டுவேறு ஒரு மண்டபத்திற்கு சென்றேன். அங்குறேடியோ பாடிக் கேட்டது. அகதி ஒருவர் றேடியோ வைத்திருந்தார். நிம்மதியாகக் கண்ணைமூடிப் படுத்துக்கொண்டு பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவரை நான் குழப்ப விரும்பவில்லை. அப்பால் சென்றேன்.

கல்கமுவாவில் அவர் ஒரு சைவச் சாப்பாட்டுக் கடை வைத்திருந்தவர். பெயர் செல்லத்துரை. அவரது கடையை எரித்துவிட்டார்கள். அதுமட்டுமல்ல; அவரது வீட்டையும் விட்டுவைக்கவில்லை.

முகாமில் குடும்பத்துடன் தங்கியிருந்தார். அவரிடம் பேச்சுக்கொடுத்தேன்.

'திரும்பிப் போகும் நோக்கம் இருக்கா?' என்று கேட்டேன்.

பாதுகாப்புடன் போயிருந்தாலும் சீவிக்கமுடியாதென்று சொன்னார்.

**58ம்-77ம்**

கடை முழுவதும் எரிந்து விட்டதா? என்று கேட்டேன்

'கடைச் சாமான்கள் முழுவதும்' எரிந்துவிட்டது என்றார் 58ம் ஆண்டு நடந்த கலவரத்தின்போது இப்படிக் கரைச்சல் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

கடையில் சுமார் 45,000 ரூபாவும், வீட்டில் சுமார் 15,000 ரூபா சேதமென்றும் அவர் கூறினார்.

அவருடன் கல்கமுவாவில் சிகை அலங்கரிப்பு நிலையம் வைத்திருந்த ஜெகநாதன் என்பவரும் நின்றார்

நடந்தவை பற்றி அவரிடம் கேட்டறிய விரும்பினேன்.

''19ந் தேதி, அங்கு கலவரம் ஆரம்பித்தது. பகல் 11 மணிக்குக் கூட்டமாக வந்து, கடைகளைத் தாக்கினார்கள். நாங்கள் கடைகளைப் பூட்டிவிட்டு ஓடிவிட்டோம். கடைகளை உடைத்துச் சாமான்களை வெளியில் போட்டு நெருப்பு வைத்தார்கள். 26 தமிழ்க் குடும்பங்கள் அங்கிருந்தன'' என்றார்.

''அது சாந்தக் கடையா?''

''சொந்தக்கடையும் உண்டு.'' வாடகைக் கடையும் உண்டு.

''எத்தனை கடைகள் சேதமாக்கப்பட்டன?''

''11 கடைகள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன ''

''தாங்கள் வீட்டிலிருந்த போது வீட்டுக்கு நெருப்பு வைத்து விட்டார்களென்றும், அதன் பின் ஒரு முஸ்லிம் வீட்டில் இருந்ததாகவும் அவர் கூறினார்.

வீட்டிலிருந்த 150 புசல் நெல் எரிந்துவிட்டதாகவும்'' கூறினார்.

''பாதுகாப்புக்காக எங்கே போனீர்கள்?''

**திரும்பினாலும் வாழமுடியாது**

கல்கமுவாப் பொலிஸ்நிலையம் சென்று, அங்கிருந்து குருநாகல் சென்று ஒன்பது நாட்களுக்குப் பின் இங்கு வந்துசேர்ந்ததாகக் கூறினார்.

திரும்பவும் போக இருக்கிறீர்களா?

போனாலும் அங்கு வாழமுடியாது என்று கூறிவிட்டார்!

நீண்ட காலம் வாழ்ந்தவர்களே தப்பிக்கொள்ளமுடியவில்லை தினமும் சந்தித்துச் சுகதுக்கங்களில், பங்கு கொண்டு சகோதரர்கள்போல் வாழ்ந்து வந்தவர்களே பாதிக்கப்பட்டுள்ளார்களென்பதை அகதிகள் மூலம் அறிய முடிந்தது.

அநுராதபுரம் களத்தாவில் 60 வருடம் வாழ்ந்து வந்தவர் இராமலிங்கம். அவர்கூட வீடு வாசல் நிலபுலன்களை இழந்து அகதியாக வந்திருக்கிறார். அவர் குடும்பத்தில் 10 பேர் உடைமைகள் யாவற்றையும் இழந்துவந்திருக்கிறார்கள் அவர் அங்கு ஒரு விவசாயியாகவே இருந்தார்.

மற்றொருவர் 42 வருடகாலம் பல சரக்குக் கடை வைத்திருந்தவர். பெயர் இரத்தினம் அவரும் அகதியாகவே வந்திருக்கிறார்.

பெரியகலத்தாவில் 29 வருடகாலம் வாழ்ந்தவர் ராசரத்தினம். அவர் ஒரு ஆயுர்வேத வைத்தியர். பாவற்குளத்தில் 35 வருட காலம் வாழ்ந்தவர் அ. மயில்வாகனம் இவர் குடும்பத்தில் 8 பேர். இவர்களும் அகதிகளாகவே வந்திருக்கின்றனர் இவர்கள் எவருக்குமே முன்பின யாழ்ப்பாணம் 'கறுப்பா சிகப்பா' என்று தெரியாது.

**முஸ்லிம் அகதி**

கெக்கராவ செக்குப்பிட்டியில் வியாபாரம் செய்துவந்தவர் எஸ் கருப்பையா இவருக்கு 10 பிள்ளைகள். குசைன் முகைதீன் என்ற ஒரு முஸ்லிமும் அகதியாக வந்திருக்கிறார். கடுகண்ணாவலையிலிருந்தும்கூட எஸ். சிதம்பரம் என்பவர் அகதியாக வந்திருக்கிறார். நீண்டகாலம் வாழ்ந்தவர்கள் கூட அந்த இடங்களில் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்கள்.

அறநாயக்காவிலிருந்து அகதியாக வந்தவர் டாக்டர் கி. ஆர். வேதநாயகம். இவர் அங்கு ஒரு வைத்தியசாலை நடாத்திவந்தவர். வாடகை வீட்டில் குடியிருந்தவர்

''என்ன நடந்தது?''

''19-ம் தேதி வீட்டையும் டிஸ்பென்சரியையும் எரித்து விட்டார்கள்''- என்று கூறினார்.

''சொந்த ஊர் எது?''

''நாங்கள் பிறந்துவளர்ந்தது நுகெகொட " நாங்கள் யாழ்ப்பாணத் தமிழர் தான்' என்றார்.

''உறவினர்கள் வேறுயாரும் இல்லையா?'' என்று கேட்டேன்.

''அம்மா குருகமாவில் இருக்கிறா. குருகமாவிலும் வீடு எல்லாம் எரிந்துவிட்டது'' என்றார்.

''அம்மா இப்போது எங்கே?''என்று கேட்டேன்.

''அம்மா இந்துக்கல்லூரி முகாமிற்குச்சென்று அங்கிருந்து மட்டக்களப்பு முகாமிற்குச் சென்றுவிட்டார்.'' என்று கூறினார்.

அவருக்கு ஒரு குழந்தை மட்டும் தான் உண்டு முகாமில் 4 நாட்களாக இருக்கின்றார்கள்.

வீடு எரிந்ததும் என்ன செய்தீர்கள்'' என்று கேட்டேன்.

''ஒரு முஸ்லிம் வீட்டில் சில நாட்கள் தங்கியிருந்தோம். அதன்பின் இங்குவந்தோம்'' என்று கூறினார்.

இங்கு வந்து வெளியில் சில நாட்கள் ஒரு நண்பர் வீட்டில் இருந்தாகவும், அதன்பின், முகாமிற்குவந்ததாகவும் கூறினார்.

**டிஸ்பென்சரி நடத்த ஆசை**

யாழ்ப்பாணத்தில் ஒரு டிஸ்பென்சரி ஆரம்பித்து நடத்தலாமே என்று சொன்னேன்.

''அதற்கு பணம்வேண்டுமே அத்துடன் என்வீட்டுடன் என் 'சேர்டிபிக்கட்' எல்லாம் எரிந்துவிட்டது'' என்றார்

''என்னசெய்ய உத்தேசம்?'' என்று கேட்டேன்.

''இங்கு ஒரு காணித்துண்டு கிடைத்தால் அதிலிருந்து கொண்டு டிஸ்பென்சரியை ஆரம்பிக்கலாம்'' என்று கூறினார்.

அதற்குமுதல் புதிதாக என் சேர்டிபிக்கட்டுகளை எடுக்க வேண்டும் என்று சொன்னார்.

இங்கு சாப்பிட்டு வசதி எல்லாம் எப்படி? என்றேன்.

''ஒழுங்காக கவனிக்கிறார்கள் ஒரு குறையும் இல்லை''.

சமூகசேவை இலாகா அகதிகளுக்கு அரிசிவழங்கிவருகிறது. விற்பனை இலாகா மரக்கறி வழங்கிவருகிறது. ப. நோ. கூ. சங்கத்திலிருந்துபேக்கரிக்குமா அனுப்பப்பட்டு, தினமும், காலையிலும் மாலையிலும் பாண் வருகிறது. நண்பகல் சோறு, சிறுவர்களுக்கு பிஸ்கட், பால்மா வழங்கப்படுகிறது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு யோகநாதனும், மற்றும் அவர் காரியாலயத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பொதுமக்களும், பெரும் உதவிசெய்கிறார்கள்.

(தொடரும்)

---

## இமயத்திலுதித்த தெய்வீக வாழ்க்கை உலகெலாம் பரவுக!



அகில உலக திவ்யஜீவன சங்கத் தலைவர் ஸ்ரீ சுவாமி சிதானந்த மகராஜ் அவர்களின் 61-ம் ஜெயந்திவிழாவை அகில உலகமும் இன்று கொண்டாடுகிறார்கள். குருதேவர் சிவானந்த மகரிஷ அவர்களின் சிரேஷ்ட சீடராகவிருந்து, குருதேதர் சமாதியடைந்தபின் தலைமைப் பீடத்தை ஏற்றுக்கொண்டார். சுவாமி சிவானந்தரை நினைக்கும்போது இமாலயமே முன்வந்து நிற்கிறது. சிதானந்ஜி அவர்களை நினைக்கும்போது எவரெஸற் சிகரமே முன்வந்து நிற்கிறது.

சிதானந்தஜி பிறக்கும்போதே சந்நியாசியாகப் பிறந்தவர் என்பது சிவானந்தருடைய வாக்கு. ஆதலால் சிதானந்தஜி எனது குரு நான்அவரைவணங்குகின்றேன் என ஒரு இடத்திலே கூறியிருக்கின்றார். சிவானந்தருடைய பூத உடல் மறைந்தாலும் அவரது திவ்யாத்துமா சிதானந்தருள் புகுந்து நின்று கருமம் ஆற்றிவருகின்றது.

சிதானந்தஜி சுவாமி அவர்கள் 1970-ம் ஆண்டு இலங்கைவந்து யாழ். திவ்ய ஜீவன சங்கமண்டபத்தை திறந்துவைத்தார். அவர் இலங்கையில் தங்கி நிற்கும் போது, அரசன் முதல் ஆண்டி ஈறாக எல்லாரும் தரிசித்து அவர் அருள் உபதேசத்தை கேட்கும் வாய்ப்புப்பெற்றனர். சுவாமிகள் இலங்கையில் கால்வைத்ததுமே இறைவன் நாமத்தையே ஆசியாக அருளினார்கள். அவர் அருளுபதேசத்தை நாடிச்சென்றவர்களுக்கு''ஆண்டவனைக் கைவிடாதீர்கள் அவன்தான் உங்கள் நன்மை தீமைகளை அறிபவன், நாம ஜெபத்தின் மூலம் அவனை அடையுங்கள்'' என எல்லாருக்கும் ஏற்ற அருளுபதேசங்களை வாரி வழங்கினார்கள். சுவாமிகள் இலங்கை வருபபோதெல்லாம் மக்களிடையே ஒரு ஆத்மீக விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது அவரது புனித பாதங்கள் பட்ட இடங்கள் தெய்வீக வாழ்வை அடைந்தன. இமாத்துக்கங்கை பலதுறைகளிலும் ஓடி பலரையும் வாழ்விப்பதுபோல இமயத்திலுதித்த தெய்வீக வாழ்க்கையும் சிதானந்தஜிமூலம் அகில உலகமும் பரவுவதாக.

சி. கனகரத்தினம்

அரச சட்டத்தரணியும், யாழ். தி.ஜீ.ச. தலைவரும்

---

## சிதானந்தா ஜெயந்தி

யாழ்ப்பாணம், சனி சுவாமி சிதானந்தர்ஜெயந்தி விழா இன்று சனிக்கிழமை மாலை நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாலை 3 மணிக்கு அகண்ட நாம பஜனையும் 6 மணிக்கு பண்ணிசைப் புலவர் திரு வே சிவஞானத்தின் பண்ணிசைக் கச்சேரியும் பஜனையும் நடைபெறும். (இ)

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி.ப.2-30, 7-00
சிவாஜி - சாவித்திரி
**வடிவுக்கு வளைகாப்பு**

**நாகம்ஸ்**
(சுன்னகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
**பூம்புகார்**

**Regal** (Jaffna)
Daily at 10-30 a.m., 4-45 & 7-00 p.m.
One Man, one Woman a Blitzkrieg of Emotion, Between them a Flame is Kindled that Spendidly Ignites a Passion, Way beyond the limits of their imagination.
BRIEF FNCOUNTER Now a Major Film!
starring
Sophia Loren — Richard Burton in
**BRIEF ENCOUNTER** (Color)

**RIO** (Jaffna)
LAST FEW DAYS DON'T MISS IT
Daily 10-30, 4-45, 7-15 p.m. only
Action packed-Suspense filled
Thrilling Drama
Robert Shaw - Robert Ryan in
**CUSTER OF THE WEST**
(Scope Color. Also News-Opening of Parliament)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் — ஜெய்சித்ரா
**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7698
ஜெய்சங்கர் — சுஜாதா
**நீ ஒரு மகாராணி**

**சாந்தி** யாழ். நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30 காட்சிகள்
ஃ முத்துராமன் ஃ சிவகுமார்
ஃ ஜெயசித்ரா ஃ சோ நடித்த
**எங்கம்மா சபதம்**
— உன்னத உணர்ச்சிக் காவியம் —

**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7180
சசிகுமார் - நிர்மலா - சந்திரபாபு நடித்த
**அவள்** (கலர்) [புதியபிரதி]

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரிகாலை 10-30, 2-00, மாலை 5-00,
சனி, ஞாயிறு 10-00, 1-00, 4-00, 6-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
**அன்னக்கிளி**

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-00, 6-00
தேவரின்
**பெண் தெய்வம்**


## விறகு விற்பனை ஆரம்பம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் இவ்வாரம் தொடக்கம் தனது கிளைச் சங்கங்கள் மூலமாக விறகு விற்பனையை ஆரம்பித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள பொது மக்கள் விறகு கிடைக்காமல் மிகவும் சிரமப்படுவதை கருத்திற்கொண்டே சங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் சில கிளைச் சங்கங்களில் விற்பனை செய்வதற்கு போதிய இடவசதியில்லை என்ற காரணத்தினால் விறகு விற்பனைசெய்ய முடியாதகால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனராம்.

## தகவல் கோருகிறார்

யாழ்ப்பாணம், வெள்ளி

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிப்புற்ற அனுராதபுரத்தைச் சேர்ந்த திரு. சி. மகேஸ்வரனது, 'குஷன்' துண்டு ஒன்று வவனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறி விட்டது.

வன்செயல்களில் இவரது வீடுஉடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டபோது மீதியாகவிருந்த சில பொருட்களை லொறியில் ஏற்றி வந்தசமயம் இப்பொருள் தவறிவிட்டது. கருணையுள்ளம் படைத்தவர்கள் இதுபற்றிதகவலை 'ஈழநாடு' உடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்படுகின்றனர். (கெ)



24—9—77 சனி

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

6-05 சைவநற்சிந்தனை சோ. பத்மநாதன், 6-10 கத்தோலிக்க நற்சிந்தனை சங். பிதா டீ. சாமிநாதன், 6-50 ஸ்தோத்திரமாலை ஸ்ரீ வெங்கடேச சுப்பிரபாதம், 7-05 இசைக் கோவை, 7-35 பாட்டு சௌபாக்கியலக்ஷ்மி சிவஞானம், 8-00 லகுசங்கீதம்.

மாலை 6-20 திருமுறையமுதம், 6-30 சங்கநாதம், 7-00 கிராமியச்சித்திரம் 'நேர்த்திக் கடன்' எழுதியவர் எஸ். நல்லதம்பி, 7-35 மேழிச் செல்வம், 8-05 களஞ்சியவிருந்து, 8-30 இஸ்லாமியகீதம், 8-45 கவ்வாலிப்பாடல்கள், 9-30 நாடகம் 'சாரங்கதரா' இசைநாடகம்- வானொலிக்கென அமைப்பவர் கே. எம். வாசகர், 10-00 தவில் கச்சேரி, 10-30 வயலினிசை லால்குடி ஜெயராமன். (கெ)

## திருவிழாவும் இசையரங்கும்

யாழ்ப்பாணம், சனி

சாந்தையர்மடம் கற்பக விநாயகர் கோவில் அலங்கார உற்சவம் எதிர் வரும் 27ம் திகதியுடன் நிறைவு பெறுகிறது. உற்சவம் கடந்த 17ம் திகதி ஆரம்பமானது.

உற்சவ நாட்களில் இரவு இசை நிகழ்ச்சிகள் இடம் பெற்றுவருகின்றன. இன்றை இசை அரங்கில் திருமதி கிருபாமணி மகாலிங்க சிவம் பாடுவார்.

25ம் திகதி திருமதி நாகேஸ்வரி பிரமானந்தாவும் 26ம் திகதி திருமதி சௌபாக்கிய லட்சுமி சிவஞானமும் 27ம் திகதி வயலின் வித்துவான்கள் பிச்சைப்பா- ரி. வி விநாயகமூர்த்தி ஆகியோரின் கச்சேரிகளும் இடம்பெறும். (அ)

வவனியா

# அகதிகள் முகாமில் தொற்று நோய்!

வவனியா, வெள்ளி

வவனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாமில் இருவருக்கு தொற்றுநோய் பரவியுள்ளது.

இந்த முகாமிலுள்ள அகதிகளுக்கு சர்வோதய இயக்கத்தினால் பால்மா வழங்கப்பட்டது.

காந்திசேவா மன்றத்தைச் சேர்ந்த பெண் தொண்டர்கள் தினமும் வந்து அகதிகளுக்கு காலையில் பால் கரைத்துக் கொடுக்கிறார்கள்

பால்மா போதியளவு இருப்பதாகவும் தினமும் தாவுகள் அகதிகளுக்கு பால் உணவு வழங்க முடிவு செய்திருப்பதாகவும் பெண் தொண்டர்கள் தெரிவித்தனர். (க)

வவனியா விவசாயிகளுக்கு

## 5 ஏக்கர் காணிக்குரிய கடனுதவி கிடைக்கும்

வவனியா, வெள்ளி

வவனியாத் தொகுதி ஐ. தே. க. அமைப்பாளர் திரு. கா. த. புலேந்திரன், விவசாய காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவைச் சந்தித்து, வவனியா விவசாயிகள் கடனுதவி பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஏற்கனவே எடுத்த கடன்களைக் கட்டாதவர்களுக்கும் இம்முறை 5 ஏக்கர் காணிக்குரிய கடனுதவியை வழங்க அமைச்சர் முன்வந்துள்ளார்.

மேலும் வவனியாவிலுள்ள விவசாயிகள் கிணறு வெட்ட அதிக பணம் எடுக்கலாமெனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வேலணை

## விவசாயிகள் நலன்கருதி ஏ. ஜி. ஏ. நடவடிக்கை

வேலணை, வெள்ளி

வேலணைப் பகுதியில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதவகையில் வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இவற்றை போதிய அளவு நிரப்பிவைக்க உதவி அரசாங்க அதிபரும் மேற்படி சங்கத் தலைவருமான திரு. மு. சுப்பிரமணியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மாரிகாலத்தில் விவசாயிகளின் நலன்கருதி இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

இடம் பெயர்ந்து வந்த

## ஆசிரியர்களின் சொந்த விலாசத்துக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், சனி

பல்வேறு மாவட்டங்களில் சேவைசெய்து அண்மையில் நடந்த அசம்பாவிதங்கள் காரணமாக இடம்பெயர்ந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்துள்ள கிட்டத்தட்ட 2000 ஆசிரியர்களின் பெயர், பாடசாலை என்பவற்றுடன் அவர்கள் தற்போது தங்கியிருக்கும் வீட்டு விலாசங்களையும் வடமாநிலக் கல்வி அதிபதி அந்தந்த மாவட்டங்களின் கல்வி அதிபதிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார். இத் தகவலை இ. த. ஆசிரியசங்க பொதுச்செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இவ்வாசிரியர்களின் செப்டம்பர் மாதச் சம்பளம் அந்தந்தப் பிரதேசக் கல்விஅதிபதி மாவட்டப் பிரதம கல்வி அதிகாரிகளால் ஆசிரியர்களது தற்போதைய தனிப்பட்ட விலாசங்களுக்குத் தனித்தனிக் காசோலைகளாக அனுப்பிவைக்கப்படவேண்டுமெனச் சகல கல்வித்திணைக்களங்களுக்கும் கல்விஅமைச்சு கட்டளையிட்டமைக்கமையவே இது நடைபெற்றுள்ளது என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் இடம்பெயர்க்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் நிலை, சம்பளம்போன்ற விடயங்கள் தொடர்பாகக் கல்விஅமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தின, அமைச்சின் செயலாளர் திரு. தசநாயக்க, பிரதமகணக்காளர் திரு டி. ரி பி. குணவர்த்தன ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோது செப்டம்பர் மாதச் சம்பளத்தை இவ்வாறு தனித் தனிக் காசோலைகளாக ஆசிரியர்களின் விலாசங்களுக்கு அனுப்பிவைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான கட்டளை அமைச்சால் பிறப்பிக்கப்பட்டது என்றும் திரு. பாலசுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார்.

அமைச்சின் கட்டளைக்கேற்ப துரிதமாக செயற்பட்டு குறுகியகாலத்தில் இடம்பெயர்ந்த ஆசிரியர்களின் பட்டியல்களை அனுப்பிவைத்த வடமாநிலக் கல்விஅதிபதி மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நன்றிபாராட்டியுள்ளது.

• • •

## தொழிற்சங்கம் அமைக்க ஆலோசனை

பண்டத்தரிப்பு, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் காரியாலய உதவியாளராக கடமையாற்றும் ஊழியர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தனியான தொழிற்சங்கமொன்றை அமைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று அடுத்தமாத முற்பகுதி நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை பண்டத்தரிப்பு பட்டணசபையைச்சேர்ந்த திரு. ம. ஞானப்பிரகாசம் மேற்கொண்டுள்ளார். (உ)

### மணிவாக்கு

அறிவாயின் கையிலுள்ள மையின் கறை தியாகியின் இரத்தக்கறையைவிடப் புனிதமானது. - முகமதுநபி

ஈழநாடு

The Eelanaadu

## அரசின் உதவி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு சம்பந்தமாகப் பிரதமருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகளில் நியாயமான உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது எதிர்காலம்பற்றி நம்பிக்கையளிப்பதாகும்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றிய அரசாங்க சேவையிலுள்ளவர்கள் பலரும் வீடுவாசல்களையும் தமது உடமைகளையும் இழந்து உடுத்த துணியுடன் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு அகதிகளாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள்.

வெளியூர்களில் வர்த்தகம் செய்து கொண்டிருந்தவர்கள் தமது வர்த்தக நிலையங்களை இழந்து தமது தேட்டங்களையும் இழந்து அகதிகளாகத் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியவர்கள்.

மலையகப் பகுதியிலேயே பிறந்து வளர்ந்து அங்கேயே தொழில் செய்து நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியே தெரியாமல் வாழ்ந்த பலர் அப்பகுதியில் தமது தேட்டங்களை இழந்து வடக்குப் பகுதிக்கு அகதிகளாக வந்துள்ளனர்.

இப்படி அகதிகள் பிரச்னை மூன்று பிரிவாக உள்ளது.

அரசாங்க சேவையிலும் வர்த்தகத்திலுமீடுபட்டு உயிர் இழந்தவர்களுமுண்டு. இவர்களின் உழைப்பிலேயே தங்கியிருந்த குடும்பங்களும் இன்று அகதிகளின் நிலையிலேயே இருக்கின்றன.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா மூவாயிரம் ரூபாய் உடனடி நிவாரணமாக வழங்குவதற்கு உத்தர விடப்பட்டிருக்கிறது. இது மிகச் சிறியதொகையே ஆனாலும் தகுந்த விசாரணைகள் முடிந்து சரியான விபரங்கள் பெறப்பட்டபின் கணிசமான அளவு நஷ்டஈடும் வேறு நிவாரணமும் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் மீண்டும் தாம் பணியாற்றிய பகுதிகளுக்குச் செல்வதற்கு அஞ்சுகிறார்கள். மோசமாகப் பாதிக்கப்பட்ட இடங்களைச் சேர்ந்த ஊழியருக்கு இடமாற்றம் செய்வதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசாங்க ஊழியர் சம்பந்தமான இடமாற்றப் பிரச்னையும் படிப்படியாகத் தீர்க்கப்படலாமென்பதற்கு இது ஒரு அறிகுறியென்றே தோன்றுகிறது.

அகதிகளில் பெரும் பிரச்னையாக இன்று உருவெடுத்திருப்பது சொந்த இடமெதுவும் இல்லாது வடக்கே வந்துள்ள மலையகப்பகுதிகளைச் சேர்ந்தவர்களாகும்.

இவர்களில்ஆயிரம் பேருக்கு திருக்கேதீச்சரம், மடுறோட், முருங்கன் ஆகிய பகுதிகளில் நிலம் வழங்குவதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது மகிழ்ச்சிக்குரியது. என்றாலும் இன்னும் பலர் இதேநிலையிலிருப்பதாலும் மீண்டும் வர்த்தகம் தொழில்புரிவதற்கு வெளியூர்களுக்குத் திரும்பிச் செல்லவிரும்பாதவர்களிருப்பதாலும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தரிசாகக் கிடக்கும் நிலங்களை மேலும் ஒதுக்கிக்கொடுப்பது அகதிகள் பிரச்னையே இல்லாமல் போவதற்கு வழிபிறப்பதாகும்.

அரசின் இந்த உதவிகளை வரவேற்கும் அதேசமயம் தனியார் துறையினரும் பொதுஸ்தாபனங்களும் புதிய புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க முன்வருவது பலருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் பொருளாதாரம் விருத்தியடையவும் உதவுவதாக இருக்கும்.

# 280 அகதிகள் நேற்றும் வந்தனர்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சிக்கு நேற்றுக் காலை பஸ்களில் சுமார் 280 அகதிகள் வந்து சேர்ந்தனர். இவர்கள் முகாம்களில் அனுமதிக்கப்படவில்லை.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் காரியாலயத்திலேயே இவர்கள் தங்கியிருக்கின்றனர்.

இவர்கள் கெக்கிராவை, மதவாச்சி, கண்டி, குருநாகல், கல்கமுவ பகுதிகளிலிருந்து வந்துள்ளனர்.

இவர்களுக்கு கிளிநொச்சிப் பகுதி மக்களும், வர்த்தகர்களும் உணவு வழங்கி வருகிறார்கள். (க)

## அகதிகளுக்கு இந்துசபை ரூ. 50,000 நன்கொடை

கண்டி, வெள்ளி

கண்டிப் பகுதியில் சமீபத்தில் நடைபெற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு 50,000 ரூபா பெறுமதியான ஆடைகள், குழந்தைகள் உணவு என்பதை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மத்திய மாகாண இந்துசபை இந்த அன்பளிப்பை வழங்கியது.

சபைத் தலைவர் திரு. துரைசாமிப்பிள்ளை இவற்றை அகதிகளுக்கு விநியோகித்தார்.

சபையின் உறுப்பினர்களும் தனிப்பட்ட முறையிலும் அகதிகளுக்கு உதவினர். (உ)

காவலூர்

## விவசாயிகள் பிரச்னை: இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

ஊர்காவற்றுறைத் தொகுதியிலுள்ள பயிர்ச்செய்கையாளர்களை எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி ஆராயும் கருத்தரங்கு ஒன்று இன்று காலை வேலணை மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில், பயிர் செய்கையில் ஏற்படும் செலவைக் குறைத்தல், தரைப் பண்படுத்தலை அதிகரித்தல், குறைந்த செலவில் கூடிய பயனைப் பெறுதல். கால்நடை விஸ்தரிப்பு என்பன பற்றி ஆராயப்படவுள்ளன,

விவசாய ஆராய்ச்சியாளர், திரு. புள்ளைநாயகம், பண்ணை முகாமை அதிபர் திரு. ரி. என். மாணிக்கவாசகர் ஆகியோர் பிரதமவிருந்தினராக இக் கருத்தரங்கில் கலந்து கொள்வர்.

விவசாய உபகரண உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் தமது செலவினங்களை குறைப்பது பற்றியும், விவசாயிகளுக்கு இலாபகரமான செயல்திட்டங்களை பயன்படுத்துவது பற்றியும் இக் கருத்தரங்கில் ஆராயப்படும்.

இக் கருத்தரங்குகளுக்கான ஒழுங்குகளை தீவுப்பகுதி விவசாய போதனாசிரியர், திரு. சிவக்கொழுந்து, வேலணை கிழக்கு கிராமமுன்னேற்றச் சங்க தலைவர் திரு. ஏ. கேதாரராமன், அண்ணா இளைஞர் விவசாயக்கழகத்தனர் ஆகியோர் செய்துள்ளனர். (கெ-உ)

## அர்ச்சகர்கள் நிலை: நாளை மீண்டும் ஆராய்வு

யாழ்ப்பாணம், சனி

இனவாத சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட அர்ச்சகர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மீண்டும் நீராவியடியிலுள்ள கடைச்சாமி ஒழுங்கை நடேசர் ஆலய மண்டபத்தில் கூடி தம் நிலை பற்றி ஆராய்வர்.

இக் கூட்டத்தில் சமூக சேவைத் திணைக்களத்தின் மூலம் நஷ்டஈடு கோருவதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

இதுவரை சிவானந்தகுருகுலநிர்வாகிகளுடன்தொடர்பு கொள்ளாத பாதிக்கப்பட்ட அர்ச்சகர்கள், குலகுல நிர்வாகஸ்தர் பிரம்மஸ்ரீ ப. சுப்பிரமணியஐயருடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (கெ-உ)

## தமிழர் நலன்புரி சங்கத்தின் அமைப்பு விதிகள்

யாழ்ப்பாணம், சனி

தமிழர் நலன்புரி இயக்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் கொக்குவிலில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இன்று காலை நடைபெறுகின்றது.

இந்நிர்வாக சபைக் கூட்டத்தில் இயக்கத்தின் நிர்வாக அமைப்புச் செயலாளர் திரு. செ. செல்வகுமாரால் சமர்ப்பிக்கப்படும் இயக்கத்தின் அமைப்பு விதிகளும், குறிக்கோள்களும் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், சிரமதான முகாம்கள், கைத்தொழில் பயிற்சியளித்தல் என்பன குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படும். (உ)

யாழ். நகரின் எழில்:

## ஆணையாளர் முயற்சிக்கு பாராட்டு

அரியாலை, வெள்ளி

யாழ்ப்பாண நகரில் குப்பை கூழங்களை உடனுக்குடன் அகற்றிட யாழ். விசேட ஆணையாளர் திரு. சே. சிவஞானம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைக்கு யாழ். நகர சன சமூக நிலையங்களின் சமாஜச் செயலாளர் கடிதமூலம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி அமைச்சரின் ஆலோசனையின்பேரில் தாங்கள் எடுத்துக்கொண்டுள்ள இம்முயற்சியால் யாழ் நகரம் விரைவில் எழில் நகரமாக மாறும் என்று செயலாளர் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (உ)

## 50 அகதிகள் நேற்று வந்தனர்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சிக்கு நேற்று 'யாழ்தேவியில்' 50 அகதிகள் வந்தனர். இவர்கள் கிளிநொச்சி எம். பி.யின் காரியாலயத்தில் தங்கியிருக்கின்றனர்.

இவர்கள் கெக்கிராவ மதவாச்சி, மாத்தளை ஆகிய இடங்களிலிருந்து வந்துள்ளனர்.

இவர்களுக்கான உணவுகளை கிளிநொச்சி பகுதி மக்களும் வர்த்தகர்களும் வழங்கிவருகின்றனர். இவர்கள் முகாம்களில் அனுமதிக்கப்படாததினால் கிளிநொச்சி எம். பி.யின் காரியாலயத்திலேயே தங்கியிருக்கின்றனர். (க)

## 1000 அகதிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவேண்டுமென கோரியதற்கு தாம் கமிஷன் விசாரணை நடைபெற்று முடிந்தபின்னர் ஆவன செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தை திருப்தியாக இருக்கிறதா என எதிர்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தை நிருபர் ஒருவர் கேட்டபோது, அரசாங்கம் காட்டும் அக்கறை ஓரளவுக்கு திருப்தியளிப்பதாகவிருப்பதாகவும், இவை விரைவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (ம)

## பொறியியலாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

வன்முறைச் சம்பவங்களை அடுத்து வட பகுதிக்கு வந்துள்ள பொறியியலாளர்கள் தமது எதிர்கால நடவடிக்கைகள்பற்றி ஆராயும் பொருட்டு 27-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று யாழ் ஹோட்டல் பரடைசில் கூடி ஆராயவிருக்கின்றனர்.

சென்ற புதனன்று திரு. யோகநாதன் தலைமையில் நடைபெற்ற பொறியியலாளர் கூட்டத்தில் நிலைமை சீராகும் வரை தாம் வேலைக்குத் திரும்புவதில்லை என்ற தீர்மானத்தை கூட்டத்திற்கு பெருந்திரளாகவந்திருந்த அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். (கா)

## ஆசிரிய இடமாற்றங்கள் ரத்து

யாழ்ப்பாணம் வெள்ளி

ஆசிரியஇடமாற்றங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. இதற்கான அறிவித்தல்களை சகல கல்விக்காரியாலயங்களுக்கும் அமைச்சு அனுப்பியுள்ளது. இம் மாதம் முதலாம் திகதிக்குப்பிற்பட்ட சகலஆசிரிய இடமாற்றங்களும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

## உபதபால் அதிபர்கள் 'ரிவால்வர்' கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், சனி

தற்பாதுகாப்புக் கருதி தமக்குக் கைத்துப்பாக்கிகளை அரசு வழங்கவேண்டும் என்று உப அஞ்சல் அதிபர்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று இலங்கை உப அஞ்சல் அதிபர்கள் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் ஏகமனதா நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. கு. இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விபரம் வருமாறு:-

''வங்கிகளிலும் பொதுஸ்தாபனங்களிலும் திருட்டுக்களும் கொள்ளையும் நடைபெற்றிருப்பதால், உப தபால் அதிபர்களின் தற்பாதுகாப்புக்காக அரசினர் அவர்களுக்கு ரிவால்வர் வழங்கவேண்டும்.'' (இ)

## முகாம்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புள்ள பகுதிகளிலிருந்து வந்துள்ளனர்.

மாத்தளை முத்துமாரி அம்மன் முகாமிலிருந்த பின் சொந்த இடங்களுக்கு சென்ற போது அங்கு வாழமுடியாத சூழ்நிலையிலிருப்பதால், இங்கு வந்ததாக அகதிகளில் ஒருவர் கூறினார்-

கூட்டணி காரியாலயத்தில் தங்கியிருந்த அகதிகளில் ஒருவர் நேற்று இரவு நெஞ்சுவலி ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க)

## ஆராய்வர்

யாழ்ப்பாணம், சனி

காங்கேசன்துறைத் தொகுதியில் 1977-ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைகள் நிலை பற்றி ஆராய்வதற்கான கூட்டம் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மேல்மாடியில் நாளை சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. (கெ-அ)

## மரண அறிவித்தல்

### கந்தவனம் வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம் பெரியகடை பிரபல பழ வியாபாரியும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் வவனியா தேரிதல் அலுவலகத்தைச் சேர்ந்த குமாரசாமி, பழ வியாபாரி நடராசா கந்தசாமி ஆகியோரின் மாமனுமான கந்தவனம் வேலாயுதபிள்ளை காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கொட்டடி சிவன்பண்ணை வீதி 50ம் இலக்க இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்துக்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். 7211

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.